சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 75/2018

பெயர் திரு. ஷைலாக் ஸ்டிபன் நாள். 26.11.2024
த/பெ.

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் வாதியின் நிர்வாக அதிகாரி கிடையாது என்றால் சரிதான். எங்கள் சொத்தில் பிரதிவாதிகள் வரக்கூடாது என்றும், எங்கள் சொத்தை எங்களிடம் கொடுக்க வேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்குச் சொத்தை மீண்டும் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்தை கடந்த வருடம் பார்த்தேன் அதில் சுற்று சுவர் உள்ளது. 2ம் பிரதிவாதி அந்த சுற்றுசுவரை எப்பொழுது போட்டார் என்று எனக்கு தெரியாது. வழக்குச் சொத்தில் தேக்கு மரங்கள் மற்றும் கொய்யா மரங்கள் உள்ளன. வேறு மரங்கள் உள்ளனவா என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்கு குறித்து தெரிந்து கொண்டேன். வழக்குச் சொத்துக்கள் எங்களுக்கு உரிமையானது என்றும் 2015ம் வருடம் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் செல்லாது என்றும், 2018ல் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் செல்லாது என்றும், வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் சார் பதிவகத்தில் ரத்து செய்யப்பட்டது குறித்து தெரிந்து கொண்டேன். அதன் பிறகு 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தை ரத்து செய்யக் கோரும் பரிகாரத்தை நீக்கரவு செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கிற்கு பின்னிட்டு அந்த ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. வா.த.சா.ஆ.7ன் அடிப்படையில்தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரிதான். வா.த.சா.ஆ.7 ல் கண்ட சர்பிரசாத ரெட்டிக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. புல எண் 296/3 ல் மொத்த விஸ்தீரணம் சுமார் 8 ஏக்கர் 72 வரும். அந்த 8 ஏக்கர் 72 செண்ட் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. சர்பிரசாத ரெட்டி பெயரில் வருவாய் ஆவணங்களை நான் பார்த்ததில்லை. எங்கள் பெயரில் வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் எக்காலத்திலும் இல்லை. சர்பிரசாத ரெட்டி, அந்தோணி ரெட்டி, மரியநாத ரெட்டி மற்றும் சின்னம்மாள் ஆகியோருக்கு 8 ஏக்கர் 72 செண்ட் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் சின்னம்மாள், ரோஜம்மாள் மற்றும் லூர்தம்மாளுக்கு வழக்கு புல எண்ணில் 8.72 ல் 75 செண்ட் செட்டில்மெண்ட் எழுதிய ஆவணம் என்றால் சரிதான். அது **பி.த.சா.ஆ.1 ஆகும்**. நாங்கள் இவ்வழக்கை 30 செண்ட் இடத்திற்கு தாக்கல் செய்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கில் கான்வெண்ட் உள்ளது. மேற்கே படாளம் செய்யூர் சாலை உள்ளது. தெற்கே புறம்போக்கு இடம் உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கே உள்ள சொத்துக்களை சர்பிரசாத ரெட்டி, அந்தோணி ரெட்டி, மரியநாத ரெட்டி மற்றும் சின்னம்மாள் ஆகியோர் தான செட்டில் மெண்ட் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். பி.த.சா.ஆ. 1 ஆவணத்தில் பாட்டைக்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது சரிவர தெரியவில்லை. அதில் மரியநாதன் இடத்திற்கு மேற்கே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் பெயர் சரியாக தெரியவில்லை. அதில் புறம்போக்கிற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)